630-B37
3544

உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதந்தோறும்வெளிவரும்

ஒரு தமிழ்ப்பத்திரிகை.

முப்பத்தேழாந்தொகுதி.

Volume 37.

பிரமாதி — விக்கிரம ஸூ

1939—1940.

பத்திராசிரியர்—திரு. நாராயணையங்கார்.

மதுரைத்தமிழ்ச்சங்கமுத்திராசாலை,

மதுரை.

முப்பத்தேழாந் தொகுதியுள்ளுறை.

விஷயம்.	எழுதியவர்.	பக்கம்.
அநுதாபக்குறிப்பு:—		உஎ0, சஙஉ
இந்தியப் பொதுமொழி:—	ஸ்ரீ. ராவ்ஸாஹிப். வெ. ப. சுப்பிரமணியமுதலியார், C.B.V.C.	ஙக
இராமஜெயம்:— (இராமாயணத் திருப்புகழ்)	T. K. இராமாநுஜையங்கார், உதவிப்பத்திராசிரியர்,	கரு, சஎ, ருகூ, க0கூ, கசங, உ0க, சஉஎ
ஒரு வரவேற்புப்பத்திரம்:—	ஷை	க0அ
ஓர் ஐயவினா:—	ஸ்ரீ. க. ஐயாறுப்பிள்ளை	ருஙஉ
கம்பர்பாடலொன்றின் பொருளாராய்ச்சி:—	ஸ்ரீ. N. K. பக்ஷிராஜன், B.A., B.L.	ஙஉ0
கம்பராமாயண சாரம்:—	ஸ்ரீ. ராவ்ஸாஹிப். வெ. ப. சுப்பிரமணியமுதலியார் G.B.V.C.	ஙசு, அக, கஙங, கசுகூ, உஙங, உஅகூ, ஙருங, ஙஅரு, சஙங, சசுகூ, ரு0கூ
தவறான மனப்பதிவைத்தரும் சரித்திரக்குறிப்புக்கள்:—	சுவாமி ஞானப்பிரகாசர்	ருஙகூ
தனித்தமிழ்ப்பரீக்ஷைத்தேர்ச்சிக்குறிப்பு:—		ஙஅஉ
திருச்சின்னமாலை:—	ஸ்ரீ. ப. ரா. திருமலை ஐயங்கார்	சகூங
பராதாழ்வான் வைபவம்:—	திரு. நாராயணையங்கார், பத்திராசிரியர்	உக, சுகூ, கஉக, உகக, உகஎ, உஎங, ஙஉகூ
பிழையும் திருத்தமும்:—		ங0ச, ஙசுசு
மதிப்புரை:—		உ0, கருகூ, உசுகூ, ஙஅங, சங0, சகூசு
மானக்கஞ்சாறநாயனார் திருப்பதி:—	ஸ்ரீ. வை. சுந்தரேசவாண்டையார்	க0ரு
முகவூர் மீனாட்சிசுந்தரக் கவிராயர்:—	ஸ்ரீ. ராவ்ஸாஹிப். வெ. ப. சுப்பிரமணிய முதலியார், G.B.V.C.	க
யவனர்வரலாறு:—	ஸ்ரீ. ந. இராமநாதபிள்ளை, B.A., (LOND.)	உருஎ, ங0ரு, ஙசுஎ, ச0கூ, சருக, சஅங, ருஉக

ஸரஸ்வதீகண்டாபரணம்:— (கலைமகள்கழுத்தணி) — ஸ்ரீ. V. S. ராமஸ்வாமிசாஸ்திரியார், B.A., B.L. கக, சாஉ, கூங, கசாக, ககூரு, உஉரு, உஅங, ஙசக, ச0ங, சசாங, ரு0க, ருஙங

அநுபந்தம்.

விஷயம்.

ஆங்கிலகலாசாலைத்தமிழ்ப்பரீக்ஷைத்தேர்ச்சிக்குறிப்பு!—பகுதி க0. பக். 1—28

செந்தமிழ்நேயர்களுக்கு ஒரு வேண்டுகோள்:— பகுதி—கஉ

நூல்.

[1. முற்றுப்பெற்றது.]

அமிர்தரஞ்சநி:— (22-ஆம்பாசுரவுரை) — திரு. நாராயணையங்கார், பத்திராசிரியர் (பகுதி-1) பக். 1—34

[2. முற்றுப்பெறாதவை.]

குருகைமான்மியக் குறிப்புரை:— T. K. இராமாநுஜையங்கார், உதவிப் பத்திராசிரியர் பகுதி உ, ங, ச, ரு, சா

திருமுருகாற்றுப்படை உரையாசிரியருரை: — ஸ்ரீ. ராவ்ஸாஹிப். S. வையாபுரிப்பிள்ளை, B.A., B.L. (பகுதி கக—கஉ) பக். 1–24

உ

கடவுள் துணை. 3544

செந்தமிழ்.

தொகுதி-௩௭.] பிரமாதி ௵ கார்த்திகை ௴ [பகுதி-௧.

Vol. 37. November—December 1939. No. 1.

எட்டயபுரம் சமஸ்தான வித்துவான்

முகவூர் மீனாட்சிசுந்தரக் கவிராயர்

[ராவ்சாஹிப் வெ. ப. சுப்பிரமணிய முதலியார். G.B.V.C.]

பிறப்பிடம்

முகவூர், முன் திருநெல்வேலிஜில்லாவிலிருந்ததும் இப்போது இராமநாதபுரம்ஜில்லாவிலுள்ளதுமான ஸ்ரீவில்லிபுத்தூர்த்தாலூகாவில் சேற்றூர்ஜமீன் தலைநகரான சேற்றூருக்குச் சமீபமாக உள்ள ஓர் உபகிராமம்.

குடும்பமும் குடும்பத்தாரும்

இவ்வூரில், சேற்றூர்ச் சமஸ்தானவித்வான்கள்பரம்பரைக் குடும்பத்தில், சென்ற நூற்றாண்டில் விளங்கியவர்கள், (1) கந்தசாமிக்கவிராயர் (2) இராமசாமிக்கவிராயரென்ற தமயன் தம்பிகளும், முந்தியவர்புத்திரராகிய (3) பழனிக்குமாரக்கவிராய (திருவாவடுதுறையாதீனத்தில் காஷாயம்பெற்றுத் தம்பிரான் ஆனவ)ரும், இந்தக்கட்டுரைத்தலைவரான (4) மீனாட்சிசுந்தரக்கவிராயரும், மேற்கூறிய இராமசாமிக்கவிராயர்குமாரர் (5) மு. ரா. அருணாசலக்கவிராயர் (6) சே. ரா. சுப்பிரமணியக்கவிராயர் (7) மு. ரா. கந்தசாமிக்கவிராயரான மூவருமாக எழுவராவர்.

பாண்டியன்சபையை அலங்கரித்த சங்கப்புலவர் ஏழெழுவர் போல, இந்தப்புலவர் ஓரெழுவரும் சேற்றூர்ச் சமஸ்தானபதி சபையை மகிமைப்படுத்திவிளங்கியவர்கள். இனியகவிகளியற்றுத லில் எல்லாரும் வல்லாரான இவ் வேழு புலவர்பெருமக்களும், ஏககாலத்தில் ஒரே குடும்பத்தில் விளங்கிய புதுமையை நினைந்து அதிசயமடைந்து, நான், ஒரு சமயத்தில்,

'ஓர் பெரிய கவிகுலதா ருப்பால்,'

'கந்தசா மிப்பெயரு மிராமசா மிப்பெயருங் கவினப் பூண்டு
வந்தவிரு பண்ணவருதிற் கிளைத்தகிளை பழனிக்கு மாரசாமி
நந்துமீ னாட்சிசுந்த ரம்; பினதிற் கிளைத்தகிளை நலங்கள் மிக்க
சந்தவரு ணசலஞ்சுப் பிரமணிய னெடுகந்த சாமி யாலோ.'

என்றும், மற்றொரு சமயத்தில்

'இருவிணிடை யேழிருடி யினமீன்க ளுடங்கிலங்கு லென்ன மண்ணிற்
பெருதுபுக ழேழுபுலவ ரோருகுடியி லோருங்குமிகப் பிறங்கி னரால்.'

[இருவிண் - பெரிய வானம். இனம் - கூட்டம். மீன் - நட்சத்திரம். உடங்கு - ஒருங்கு - ஒருசேர. பிறங்குதல் - விளங்குதல்.]

என்றும் கூறியிருக்கின்றேன்.

உறவுரிமையொடு கல்வியருமையும் கவிகளியற்றும் பெருமை யும் ஒருங்குடைய இவ் வேழுபுலவர்களும் கூடி முன்னோர் பழங் கவிகளையும் தங்கள் புதுக்கவிகளையும் சீர்தூக்கி ஆராய்ந்து மதிப் பிட்டுப் பாராட்டி மகிழ்கூர்ந்து இனிது வாழ்ந்தது,

'தவலருந் தொல்கேள்வித் தன்மை யுடையார்
இகலிலர் எஃகுடையார் தம்முட்—குழீஇ
நகலின் இனிதாயிற் காண்பாம் அகல்வானத்
தும்பர் உறைவார் பதி'*

என்பதை நினைவுறச்செய்கின்றது, இதுநிற்க.

---

* தவல்அரும்-குற்றமில்லாத. தொல் - பழைய. இகல் - பகை. எஃகு- மதிநுட்பம். குழீஇ - குழுவி - கூடி. நகல் - மகிழ்தல். உம்பர் - மேலிடம். உறைவார் - வசிப்பார் (தேவர்).

மேற்கூறிய எழுகவிஞருள் இந்தக் கட்டுரைத்தலைவர்வரலாற்றைக் கூறத்தொடங்குமுன், இவர் தந்தை முதலிய ஏனைய அறுவர் வரலாறுகளைச் சுருக்கமாகத் தெரிவிப்பது தகுதியாயிருக்கின்றது.

முகவூர்க் கந்தசாமிக்கவிராயர்

இவர் தந்தையார் முகவூர்க் கந்தசாமிக்கவிராயர், '1823-ஆம் பிறந்தவர். பால்யத்திலேயே திருவாவடுதுறையாதீனத்தையடுத்து, பெரும்புகழ்வள்ளலாக எழுந்தருளியிருந்த ஸ்ரீமத் சுப்பிரமணிய தேசிகசுவாமிகளுடன் அவ்வாதீனவித்துவான் தாண்டவராயத் தம்பிரானிடம் கல்விகற்றுத் தேர்ந்தவர். சேற்றூர்ச்சமஸ்தான வித்துவான்களிற் சிறந்துள்ளவர். புராதனச்செய்யுட்களிற் பல்லாயிரக்கணக்காகப் பாடஞ்செய்து அவற்றைச் சமயத்துக்கேற்ப எடுத்துக்கூறிப் பிரசங்கித்து எவ்வளவு பெரிய சபையையும் மகிழ்வித்தலில் மிக வல்லுநர். ....1887-ஆம் காலஞ்சென்றனர்'.

இராமசாமிக்கவிராயர்

இவர் சிறியதந்தையார் இராமசாமிக்கவிராயர், 'கொல்லமாண்டு க00சு-ல் ஜனனமானவர்கள். சேற்றூர்ச்சமீந்தார் சுந்தரதாசத் தேவரவர்களுக்கு வித்தியாகுருவாயுள்ளவர்கள். அதிக கற்பனாலங்காரத்தோடு கவிகள் மிகுவிரைவாகச் சொல்லுவார்கள்.'

பழனிக்குமாரத்தம்பிரான்

இவர் தமயனார் பழனிக்குமாரத்தம்பிரான், 'சிறுபருவத்தே திருவாவடுதுறையாதீனத்தையடுத்து மகாவித்துவான் ஸ்ரீ மீனாக்ஷிசுந்தரம்பிள்ளையவர்களிடத்தில் கல்விகற்றுவருங்கால் இவரது மதிநுட்பத்தையறிந்த மஹாசந்நிதானம் ஸ்ரீமத் சுப்பிரமணியதேசிக சுவாமிகள் இவர்க்குக் காஷாயந்தரிப்பித்து ஆதீனத்துத்தம்பிரான்கள் திருக்கூட்டத்துடன் சேர்த்தருளினர். ......அந்த ஆதீனத்திலேயே, வித்துவான் தம்பிரானாக இருந்து ஸ்ரீ சுப்பிரமணியதேசிக சுவாமிகளிடத்திலே சிவஞானபோத திராவிடமாபாடிய முதலிய

ஞானநூல்களைப் படித்துச் சிறந்தனர். பிற்காலத்தில் இராமநாதபுரம் ஸமஸ்தானத்து வள்ளற்றன்மைவாய்ந்த பாஸ்கரசேதுபதியவர்கள்பாலும் மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் அக்கிராஸனாதிபதியாகிய பாண்டித்துரைஸாமியவர்கள்பாலும் பலவருஷங்களிருந்து அவர்கட்குச் சைவசித்தாந்தநூல்களையோதுவித்தனர். இற்றைக்கு (1908-க்கு) 10 வருஷங்கட்குமுன் மூவலூரில் சிவபதமடைந்தனர்'.

மு. ரா. அருணாசலக்கவிராயர்

'இவர் சிறியதந்தையார் இராமசாமிக்கவிராயரின் குமாரர் மூவர்களில் முதல்வரான மு. ரா. அருணாசலக்கவிராயர், கொல்லம் ௧0௨௭-ஆவது ஆண்டு விரோதிகிருதுவருடம் பங்குனிமாதம் பிறந்தவர். திருவாவடுதுறையாதீனம் இரண்டாவது சந்நிதானமாகிய ஸ்ரீலஸ்ரீ நமசிவாயதேசிகசுவாமிகளிடம் இலக்கிய இலக்கணங்கள் நிரம்பக் கற்றவர். 25 வருடங்கள் சிவகாசியில் வசித்தவர். இப்போது (1908-ல்) மதுரைத்தமிழ்ச்சங்கத்து நூற்பரிசோதகராயிருக்கின்றவர். ஷை சங்கவித்துவான்களிலொருவர். சிவகாசித்தலத்து விசுவேசரையே தமது பிராணார்த்தராகக்கொண்டு சிவகாசிப்புராணம், பதிற்றுப்பத்தந்தாதி, கலித்துறைத்திரிபந்தாதி, வெண்பாவந்தாதி, கலிவிருத்த அந்தாதி, மாலை: பாடியவர். இவையன்றித் திருச்செங்கோட்டுத் திரிபந்தாதி, திருப்பரங்கிரி முருகர் பிள்ளைத்தமிழ், சேறைத் தவம்பெற்றநாயகிபிள்ளைத்தமிழ், இராமேச்சுரம் பர்வதவர்த்தினியம்மைபிள்ளைத்தமிழ், குறுக்குத்துறைச் சிலேடைவெண்பா, அரிமழம் மீனாட்சிசுந்தரேசர்பதிகம், மீனாட்சியம்மைபதிகம், பழனியாண்டவர் பதிற்றுப்பத்தந்தாதி, ஸ்ரீ ஆறுமுகநாவலர்சரித்திரம் முதலியன பாடியவர். அவ்வவ்வமயந்தோறும் பற்பல தனிப்பாக்களுஞ் செய்தவர். திருச்செந்தூர்ப்புராணவசனமும், திருப்பரங்கிரிப்புராணவசனமும், திருக்குற்றாலத்தலபுராணவசனமும், புதுவைப்புராணச்சுருக்கவசனமும்பாவநாசத்தலபுராணச்சுருக்கவசனமும், சிவகாசிமான்மிய வசனமும் எழுதியவர். இவைகளையும் சிவரகசியம், பாவநாசத்தலபுராணம், கம்பராமாயணம் ஆரணியகாண்டவுரை, புதுவைத்தலபுராணம், கன்னியாகுமரித்தலபுராணம் முதலிய நூல்களையும் பரிசோதித்து

அச்சிட்டுவெளிப்படுத்தியவர். திருவாவடுதுறையாதீனவித்துவான் சுப்பிரமணியக்கவிராயரும் மதுரை விவேகபாநுப்பத்திராதிபர் கந்தசாமிக்கவிராயரும் தமது பிற்சகோதரராகப்பெற்றவர்'*

சே. ரா. சுப்பிரமணியக்கவிராயர்

'இராமசாமிக்கவிராயரின் இரண்டாங்குமாரரான சே. ரா. சுப்பிரமணியக்கவிராயர், திருவாவடுதுறையாதீனம் இரண்டாவது சந்நிதானமாகிய ஸ்ரீமத். நமசிவாயதேசிகசுவாமிகளிடம் முறையாகக் கல்விகற்றுத் தேறி அவ்வாதீனம் மகாசந்நிதானம் ஸ்ரீமத் சுப்பிரமணியதேசிகசுவாமிகள்காலத்தும், இப்போது (1908-ல்) மகாசந்நிதானமாகி யெழுந்தருளியிருக்கும் ஸ்ரீமத் அம்பலவாண தேசிகசுவாமிகள்காலத்தும் ஆதீனவித்துவானாக இருந்து அநேக தம்பிரான்களுக்கும் வேறு பலர்க்கும் தமிழ் கற்பித்து வந்து, இப்போது (1908) ஐந்து வருஷமாகத் தமிழ்ச்சங்கத்தில் சைவ நூற்பரிசோதகராக இருக்கின்றார்கள். புராதன சைவசாஸ்திரமான ஞானாமிருதமும் வில்லிபாரதமும் வேறுசில நூல்களும் இவர்கள் ஆராய்ச்சியில் பல விசேடக்குறிப்புகளுடன் வெளிப்பட்டுள்ளன. செப்பறைப்பிள்ளைத்தமிழ், அரிமழப்பிள்ளைத்தமிழ் இரண்டும் இவர்களியற்றின. இப்போது (1908) இவர்கட்கு வயசு 51 இருக்கலாம்.'

மு. ரா. கந்தசாமிக்கவிராயர்

இராமசாமிக்கவிராயரின் மூன்றாங்குமாரரான மு. ரா. கந்தசாமிக்கவிராயர் தம்மைப்பற்றித் தாம்கூறுவதாவது:—'யாம் பால்யத்தில் எமது தந்தையவர்கள்பாலும், திருவாவடுதுறையாதீனம் சின்னவகைக் காறுபாறு ஸ்ரீமத் நமசிவாயத்தம்பிரானவர்கள் பாலும் கல்விபயின்று உடுமலைப்பேட்டை போர்டுஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதராக 10 வருஷமிருந்து அதைவிடுத்து இம்மதுரையம்பதியையடைந்து விவேகபாநு என்ற பத்திரிகையையும்,

---

* இவர் விரிவான வரலாறு என்னால் எழுதப்பெற்றுச் செந்தமிழ்த் தொகுதி 36-ல் பகுதி 5-ல் உஉச—உஙO பக்கங்களில் வெளியாயிருக்கிறது.

விவேகபாநு அச்சியந்திரசாலையையும் ஏற்படுத்தி நடத்திவருகிறோம். மு. ரா. அருணசலக்கவிராயரவர்களும் சே. ரா. சுப்பிரமணியக்கவிராயரவர்களும் எமது முற்சகோதரர்கள். திருப்பேரூர்த் திரிபந்தாதி, பவாநி வேதநாயகியம்மைபிள்ளைத்தமிழ், கருமலையாண்டவர் துதிமஞ்சரி, குமணசரித்திரம், அரிமழத்தலபுராணம் என்பன யாமியற்றியவை. கம்புராமாயணம் ஆரணியகாண்டவுரையும் எழுதியிருக்கின்றோம். இப்போது (1908) எமக்கு வயசு 39*'

இனி, இக்கட்டுரைத்தலைவர் வரலாற்றைக் கூறுவேன்.

முதற்சந்திப்பிடம்—மதுரை

நான் ஒருசமயம் மதுரைத்திருவிழாவுக்குப் போயிருந்தேன். அங்கே என் மைத்துனர், வித்துவான், குன்னூர்க் குமாரசுவாமி முதலியார்† என்னுடனிருந்தார். அவர், அந்தத் திருவிழாக்காணுதற்கு மீனாட்சிசுந்தரக்கவிராயர்(இக்கட்டுரைத்தலைவர்) அண்ணாமலை ரெட்டியார்‡ என்ற இருவர் வந்திருக்கிறார்களென்றும், அவர்கள் கவிகளியற்றுவதில் மிகுசமர்த்தர்களென்றும், இருவரும் இளைஞர்களென்றும், ஆயினும், அவர்களுள் கவிராயர் ஆசிரியரும் ரெட்டியார் மாணாக்கருமாகவுள்ளாரென்றும், அவர்களைக் கூட்டிவந்து எனக்கு அறிமுகப்படுத்துவதாகவும் சொன்னார். அவ்வாறே ஒருநாள் ரெட்டியாரையும் மற்றொருநாள் கவிராயரையும் இட்டுவந்தார். முன்னவர், தாம்பாடிய கோதையந்தாதியிலும் பின்னவர் தாமியற்றிய கழுகுமலைத்திரிபந்தாதியிலும் சிலபாடல்களைப் பாடிப் பொருளுரைத்தார்கள். இருவரும் மிகுந்த சாதுரியமும் மாதுரியமும் ஒருங்கமையப் பாடவல்லவர்களென்று கண்டு மிகுந்த மகிழ்ச்சியடைந்தேன்.

---

* இதனொடு முடிந்த ஆறு வரலாற்றுச்சுருக்கங்களும், தனிச்செய்யுட் சிந்தாமணியிலிருந்து எடுத்தெழுதப்பட்டிருக்கின்றன.

†இவர் வரலாறு யானெழுதியது, செந்தமிழ்த்தொகுதி 33-ல் பகுதி 5-ல் கசக-கசசு பக்கங்களில் வெளியாயிருக்கிறது.

‡இவர் வரலாறு என்னால் எழுதப்பட்டு 'ஆனந்தவிகடன்' 1937-ம் ஆண்டு தீபாவளிமலரில் வெளியாயிருக்கின்றது.

இரண்டாம் சந்திப்பிடம்—வேள்ளகால்

நான் கவிராயரை மதுரையிற் கண்டு கலந்துபேசி அளவளாவிடகாலம் சிறிதாயினும், அச்சுருக்கமான காலத்திலேயே, 'கண்டபன்னாள் உற்றன ஒக்கும் ஒருபகல் காண்பன' என்றவாறு, அவர் என்னோடு நெடுங்காலம் பழகியவர்போலானதைக் கண்டு வியந்தேன். அவர் என் ஊரான வெள்ளகாலுக்குக்கிழக்கே மூன்றுகல் தூரத்திலுள்ள ஊற்றுமலைஜமீன் தலைநகரான வீரகேரளம்புதூருக்கு ஜமீன்தாரைக் காணுதற்குப் போகுங்காலங்களிலெல்லாம் என்னைக் கண்டு என்னுடன் சிலநாள்களிருந்துவிட்டுப்போவதாக வாக்களித்தார். அவ்வாறே செய்துவந்தார். அப்படிவந்த காலங்களில் அவர் ஜமீன்தார்மீது பாடிய பாடல்களைப் படித்துக்காட்டிப் பொருள்தெரிவித்து என்னை இன்புறச்செய்துவந்தார்.

மூன்றும் சந்திப்பிடம்—திருநேல்வேலி

சங்கீத சாகித்திய வித்துவான்களை ஆதரிக்கும் வள்ளலாக விளங்கிய இராசவல்லிபுரம் முத்துசாமிபிள்ளை திருநெல்வேலியில் வசித்துவந்தார். திருநெல்வேலி வித்துவான் அழகியசொக்கநாதபிள்ளையும்* வேம்பத்தூர்ப் பிச்சுவையரும், கல்போதுப் புன்னைவனக்கவிராயரும், மேற்கூறிய ஏழுகவிஞருள் பழனிக்குமாரத்தம்பிரானும் இளையகந்தசாமிக்கவிராயரும் தவிர, (இந்தக் கட்டுரையுடையாரையுள்ளிட்ட) அறுவரும், சென்னிகுளம் அண்ணாமலைரெட்டியாரும், ஊற்றுமலைச் சமஸ்தானவித்துவான்களான முத்துவீருப்புலவர் கந்தசாமிப்புலவர் கந்தசாமிக்கவிராயர் ஆகியவர்களும், திருநெல்வேலி முத்துப்புலவரும் பிள்ளையவர்களிடம் அடிக்கடிவந்து அவர்மீது துதிகவிகளும் பிரபந்தங்களும் பாடிப் பரிசுபெற்றுப்போவதுண்டு. நான் திருநெல்வேலியிலிருந்தபோது, இக்கவிஞர்கூட்டத்தில், இந்தச்சரிதநாயகரைப்பார்த்துப் பழகுஞ் சமயங்கள் பல வாய்த்திருந்தன. இவர் பிள்ளையவர்கள்மீது பாடியிருந்த வண்டுவிடுதூதுநூலை ஒருசமயத்திலும் பயோதரப்பத்து என்னும் பதிகத்தை மற்றொரு சமயத்திலும் மற்ற வித்துவான்கள் மத்தியிலிருந்து படித்துக்காட்டியபோது நானும் கூட இருந்திருக்கிறேன்.

---

* இவர் வரலாறு யானெழுதியது, 'காந்தைக்கட்டுரை'யில் வெளியாயிருக்கிறது.

மும்மணி

சங்கப்புலவரான நக்கீரர் கபிலர் பரணரையும், அவர்களுக்குப்பின் கவிச்சக்கரவர்த்திகளெனப் பட்டம்பெற்ற கம்பர் ஒட்டக்கூத்தர் செயங்கொண்டாரையும் அவர்களுக்குப்பின்பு கவிராயர்களான பாவநாசம் நமசிவாயகவிராயர், செங்கோட்டைக் கவிராசபண்டாரம், மேலகரம் திரிகூடராசப்ப கவிராயரையும் அவர்களுக்குப்பின் சிவஞானசுவாமிகள் குமாரகுருபரசுவாமிகள் சிவப்பிரகாசசுவாமிகளேயும், அவர்களுக்குப்பின் ஆங்கில திராவிடவாணர்களான யாழ்ப்பாணம் தாமோதரம்பிள்ளை, பூண்டி அரங்கநாதமுதலியார், திருவநந்தபுரம் சுந்தரம்பிள்ளையையும் அவ்வக்காலத்து மும்முக்கவிசிரேட்டர்களாக ஒன்றுசேர்த்துக்கூறும்படியிருத்தல்போல, முத்துசாமிபிள்ளை சபையை அலங்கரித்த கவிஞர்களுள்ளே அழகிய சொக்கநாதபிள்ளையையும் மீனுட்சிசுந்ரக்கவிராயரையும் அண்ணாமலைசெட்டியாரையும் எல்லோரும் ஏகோபித்துச் சிறந்த மூவரெனத் தெரிந்தெடுத்து நன்குமதித்து 'மும்மணி' யென்று பாராட்டிவந்தனர்.

நான்காம் சந்திப்பிடம் — எட்டயபுரம்.

நான், மிருகவைத்திய இலாகா (வெற்றரிநெரி டிப்பார்ட்மெண்டு) உத்தியோகத்தனுயிருந்தகாலத்தில், சாத்தூர்த்தாலூகா முத்துலாபுரம் மாட்டுத்தாவணி (வருடாந்தர மாட்டுச்சந்தை)யின் மேற்பார்வைக்காக அந்தத் தாவணிக்காலத்தும் முன்னும் பின்னுமாக ஒவ்வொருவருடத்திலும் ஏறக்குறைய ஒருமாதகாலம் முத்துலாபுரத்தில் தங்கும்படி இருந்தது. அந்தக்காலத்தில், இவ்வரலாறுடையார், அந்த முத்துலாபுரத்திலிருந்து ஒருகாததூரத்துக்குள்ளிருக்கும் எட்டயபுரத்தில் ஸமஸ்தானவித்துவானுக இருந்தார். ஆகவே, நான் தாவணி மேற்பார்வைக்குச்சென்ற ஒவ்வொருவருடமும் எட்டயபுரம் போய் இவரைக்கண்டு கலந்துபேசி இனிதுபொழுதுபோக்கிவந்தேன். அங்கே, அக்காலத்தில், எட்டயபுரம் ஸமஸ்தானுதிபதியாயிருந்த வேங்கடேசுவர எட்டப்பபூபதியேயன்றி அவர் கனிஷ்டபிதா (சிலகாலத்துக்குப்பின்பு தாமே சமஸ்தானுதிபதியான) வேங்கடேசுவர எட்டப்பாண்டியனும் அக்காலத்தில் எட்டயபுரத்தில் வாழ்ந்துவந்த விருதைச் சிவஞானயோகியும்,

சமீன் உத்தியோகத்தர்களான ஆண்டியப்பபிள்ளையென்ற கந்தைய பிள்ளை இராக்கப்பபிள்ளை சின்னசாமி ஐயர் (சி. சுப்பிரமணிய பாரதியாரின் தந்தையார்) காசிவிசுவநாதபிள்ளை ஆகியவர்களும் இச்சரிதநாயகரோடு பழகியவர்களாயிருந்தார்கள். இவர்களெல்லாரும் கவிச்சுவைகண்டு இனிது அனுபவிக்கும் இரசிகர்களாயிருந்தார்கள். சிவஞானயோகியும் காசிவிசுவநாதபிள்ளையும் கவிவல்லாராயுமிருந்தனர்.

மேலே கூறியவர்களன்றி நம் கவிராயரோடு நெருங்கிப்பழகியவர், **தாராசசாங்க**மென்னும்—சிங்கார ரசம்மலிந்த தெலுங்குநூலைத் தமிழ்விருத்தப்பாவில் மொழிபெயர்த்தவர் (ஒரு நாய்க்கர். பெயர் ஞாபகமில்லை).

கூ ஒருசமயம், நான் முத்துலாபுரத்திலிருந்து எட்டயபுரத்துக்குப்போய் இவரைப் பார்த்தபோது, இவர்முன்னிலையில் கூடியிருந்த வித்துவசனங்களுள்ளே தேசிய கவிதிலகரான சி. சுப்பிரமணியபாரதியாரைப்பார்த்தேன். அப்போது, அவர், பதினாறு பிராயமுடையவர்போலக் காணப்பட்டார்.

இந்தக் கட்டுரைத்தலைவர் இயற்றிய நூல்களுள், ஒருதுறைக் கோவை, முருகாநுபூதி, கழுகுமலைத்திரிபந்தாதி, திருப்பரங்கிரிப் பதிகங்கள், குதிரைமலைப்பதிகம், கழுகுமலைப்பதிகம், இராஜவல்லிபுரம் முத்துசாமிபிள்ளைமீது வண்டுவிடுதூது, பயோதரப்பத்து: என்பவை அச்சிடப்படவில்லை. எட்டயபுரம் ஆண்டியப்பபிள்ளைமீது பிள்ளைத்தமிழும் உதாரசோதனைமஞ்சரியும் தனிக்கவிகளும்* ஊற்றுமலை ஜமீன்தார் ஹிருதயாலய மருதப்பத்தேவர்மீதும் எட்டயபுரம் ஜமீன்தார் வேங்கடேசுவர எட்டப்ப நாயக்கர்பேரிலும் சேற்றூர் ஜமீன்தார் சுந்தரதாஸத்தேவர்பேரிலும் திருநெல்வேலிக் கவிராஜ ஈசுரமூர்த்தியாபிள்ளைமீதும் பாடிய தனிக்கவிகளும்† குவலயானந்த மொழிபெயர்ப்பும் அச்சேறியிருக்கின்றன. இவர் காலஞ்சென்று அரைநூற்றாண்டுக்குமேலாகின்றன.

---

* விவேகபாநு அச்சியந்திரசாலைப்பதிப்பு.

† இந்தத் தனிக்கவிகள் தனிச்செய்யுட்சிந்தாமணியில் வெளியாயிருக்கின்றன.

என் நினைவிலுள்ள இவர் பாடல்கள் சிலவற்றை இதன் அடியிலே தந்து இவர் வரலாற்றை முடித்துவிடுகின்றேன்.

இராஜவல்லிபுரம் வள்ளல் முத்துசாமிபிள்ளை
திருநெல்வேலி வித்துவான் அழகியசொக்கநாதபிள்ளை
இருவருக்குமாக எழுதிய திருபத்திலுள்ளவை.

'நன்னுக ரீகதமி ழாகாத னுகாநன் னுவ லோரே !'

(இது ஒருபாட்டின் கடைசி அடி)

'சேழுந்திருக்க மலநிகரு முமதுபதந் திசைநோக்கிச் சேவித் தேன்பின்
எழுந்திருக்க மலர்வாயுத் தரவுபெறப் பிழைபொறுப்பீர்'

(இவை ஒருபாட்டின் முற்பகுதி)

மேற்கூறிய வள்ளல்மீது இயற்றிய வண்டுவிடுதூதிலுள்ள ஒரு கண்ணி.

'கோலா கலக்கமடங் கோல மெனவுதித்தோன்
மாலீக லக்கமட வாரணவோன்'

(கமடம்—ஆமை. கோலம்—பன்றி)

பயோதரப்பத்து என்ற பதிகத்திலுள்ளவை.

'மருமலியுங் கமலமொரு வருமறியா திராக்குவிந்து மாது கொங்கை
உருவமையா தேங்கியினிப் பகற்காணி னைவருமென் றுடைந்து கண்ணீர்
பெருமடைபோற் பொழியுமிது பாரிவளைச் சேர்கனகேம் பிரா தீரா
தருநிகரா உதவுகரா நெல்லைநகர் வாழுழத்து சாமி மாலே.'

[மருமலியும் கமலம் - வாசனை மிகுந்த தாமரை. உடைந்து - இதழ்கள் விரிந்து; (மனம்) உடைந்து. கண்ணீர் - கள்நீர் - தேன்; கண்ணீர். தரு - கற்பகதரு. கரா - கரத்தை (-கையை)யுடையவனே.]

'எமதினமா கியவுமையா ளிருமுலைக்ள் செய்தவடு வின்னு மாற(து)
அமருமொரு வனுக்குமிக வணங்கலுமங் குதைபடலு மானு யென்று
மமதையொடு மேருவினைச் சீறிவளர்ந் தெழுந்தமுலை மாதைச் சேர்வாய்
சமயமறிந் தெமைப்புரக்க நெல்லைநகர் வாழுழத்து சாமி மாலே.'

[எமது இனம் - இப்பாட்டிற் குறித்த பெண்ணின் கொங்கைகளுக்கு இனம். அங்குதை - அம்(-அழகிய) குதை (-விற்குதை); அங்கு உதை.]

உ

தா(யா)ராநகரவேந்தன் போஜதேவன் இயற்றிய

ஸரஸ்வதீகண்டாபரணம்.

(கலைமகள்கழுத்தணி)

[36-ஆம் தொகுதியின் ௫௦௪-ஆம் பக்கத் தொடர்ச்சி.]

4. ஸஸம்சயம்.

...............ஸந்திக்தம் ஸஸம்ஶயம் ।

ஐயத்திற்கிடமாய்ப் பொருள்மயங்கநிற்கும் தொடர் ஸஸம்சயம் எனப்பெறும்.

உதாரணம்:—

மநோரதப்ரியாலோகரஸலோலேக்ஷணே ! ஸகி ! ।
ஆராத்வ்ருத்திரஸௌ மாதா ந க்ஷமா த்ரஷ்டுமீத்ருஶம் ॥

ஓ! தோழியே! உன் மனத்துக்கிசைந்த காதலனைப் பார்ப்பதாற் பிறந்த களிப்பால் அசைவுற்ற பார்வையுள்ளவளாயிருக்கிறாய்; உன்தாய் ஸமீபத்தில் (அல்லது தூரத்தில்) இருக்கிறாள்; இது போன்ற செயலை (அல்லது இவன்போன்றவனை) அவள் பார்க்கப் பொருள் (அல்லது பொறுக்கமாட்டாளோ? பொறுப்பாள்.)

இவ்வாறு கவர்பொருள்பட்டுப் பொருட்டுணிவிற் கிடனின்றிக் கூறப்பட்டிருத்தலால் இச்சுலோகம் 'ஸஸம்சயம்' என்று கூறப்படும்.

5. அபக்கிரமம்.

வாக்யம் யத்ர க்ரமப்ரஷ்டம் ததபக்ரமமுச்யதே ॥ ௪௮ ॥

முற்கூறவேண்டியபொருளைப் பிற்படவும் பிற்கூறவேண்டிய பொருளை முற்படவும் கூறுதலுள்ள தொடர் 'அபக்கிரமம்' எனப்படும்.

உதாரணம்:—

காரயித்வா க்ஷௌரம் க்ராமேஸோ யாதி நா
உஜ்ஜிதஸ்ய புக்தவாம்ஸ்ச ।
நக்ஷத்ரதிதிவாராந் ஜ்யௌதிஷிகம்
ப்ரஷ்டும் ஸமித: ॥

கிராமத்தலைவன் க்ஷௌரம் செய்விக்கப்பெற்று நீராடி உணவுகொண்டபிறகு, க்ஷௌரம் செய்துகொள்வதற்குரிய நக்ஷத்திரம் திதி வாரம் என்பவற்றை விசாரித்தறியச் சோதிடம்வல்லவனை அணுகினன்.

க்ஷௌரம்செய்துகொள்ளுமுன் கேட்டறியவேண்டிய விஷயத்தை, க்ஷௌரம்செய்துகொண்டபின்பு சோதிடனிடம் கேட்கச் சென்றனென்று கூறியதால் இச்சுலோகம் 'அபக்கிரமம்' எனப்படும்.

6. கின்னம்.

ஜாத்யாசாரவிருத்தம் வித்வாம்ஸோ பாஷந்தே பின்னம் ।

சாதிமரபிற்கும் ஒழுக்கமுறைக்கும் மாறுபாடாகக் கூறப்படும் வாக்கியத்தைக் கின்னம் என்பர் அறிந்தோர்.

உதாரணம்:—

விவாஹ்ய வதூஃ ஸ்வஸுராலயம் ஸிபிகயா நீயமாநா ।
ரோதிதி தேவரஸ்தாம் ஸம்ஸ்தாபயதி பார்ஸ்வே ந்யஸ்ய ॥

கலியாணம் செய்யப்பெற்றபெண், பல்லக்கில் ஏற்றி மாமனார் வீட்டிற்கழைத்துப்போம்போது விசனப்படுகிறாள். அவளுடைய மைத்துனன் (-கணவனுடன்பிறந்தவன்) அவளை அணுகிச் சமாதானப்படுத்துகிறான்.

தாய்தந்தையர்களைவிட்டுப் பிரியும்போது மணமகள் வருந்துவதியற்கையே; மைத்துனன் அவளிடம் நெருங்கி அவளைச் சமாதானப்படுத்துவது ஒழுக்கமுறைக்கு ஒத்ததன்று. ஆதலால் இது கின்னமெனப்படும்.

7. அதிமாத்திரம்.

யத்த்வலோகாதீதார்த்தமதிமாத்ரம் ததுச்யதே ॥ ௪௬ ॥

உலகவழக்கைமீறிய பொருளுடைய வாக்கியத்தை அதிமாத்திரம் என்பர்.

உதாரணம்:—

ப்ருங்கேண கலிகாகோஶஸ்ததா ப்ருஶமபீட்யத ।
வவர்ஷ விபிநே நாஸ்மிந் கோஷ்பதப்ரம் யதா மது ॥

மலராத அரும்பு வண்டினல் மிகவும் சிதைத்துழக்கப்பட்டது; அது காட்டில் பசுவின் அடிச்சுவடுநிறையுமளவாகத் தேனைச் சொரிந்தது.

சிறிதும் மலராத மொட்டினை வண்டு சிதைத்துழக்குதலும், அம்மொக்குள், நிலத்தில் ஓடிப் பாயுமாறு தேனைச் சொரிதலும் உலகிற்காணுத நிகழ்ச்சி. இங்ஙனம் உலகவழக்கொடு மாறுகொள்ள நிற்றலால் இது அதிமாத்திரம் எனப்படும்.

8. பருஷம்.

யத்து க்ரூரார்த்தமத்யர்த்தம் பாருஷம் தத்ததுச்யதே ।

மிகக் கொடியபொருளமைந்த தொடரைப் பருஷமென்பர்.

உதாரணம்:—

காத விஷம் பிப மூத்ரம் நீயஸ்வ மாரிகயா பதது தே வஜ்ரம் ।
தந்தைர்தஷ்டஸ்தநீ க்ஷிப்த்வா ஸுதம் ஶபதி மாதா ॥

பால்குடிக்கும் தன் குழந்தையின் பற்களால் தனத்தில் கடிக்கப்பட்ட தாய் குழந்தையைக் கீழே எறிந்து, (அதை நோக்கி) 'நீ விஷத்தை உண்பாயாக; மூத்திரத்தைக் குடிப்பாயாக; உன்னை மாரியம்மைகொண்டுபோவாளாக; உன் தலையில் இடிவிழுவதாக' என்று வைகிறாள்.

இச்சுலோகம் அளவுகடந்த கொடிய பொருள் அமைந்துள்ளமையால் பருஷம் எனப்படும்.

9. விரஸம்.

அநௌசித்யாத் ரஸம் யத்ர விரஸம் தந்நிகத்யதே || ௫௰ ||

எடுத்துக்கொண்ட சந்தர்ப்பத்திற்கு மாறுகிய சுவையைப் புணர்த்துக்கூறுவது விரஸம் எனப்படும்.

உதாரணம்:—

தவ வநவாஸோ நார்ஹதி த்வம் பித்ருமரணஶோகம் ஜஹீஹி கிம் தபஸா।
ஸபலய யௌவநமேதத் ஸமமநுரக்தேந ஸுதநு மயா ||

அழகுவாய்ந்த பெண்ணே! வனவாஸம் உனக்குத் தகுந்ததன்று; தவம் செய்வதால் என்ன பயன்?; தகப்பன் இறந்ததாலுண்டான துன்பத்தை விடுவாயாக; உன்மீது காதல்கொண்ட என்னுடன்கூடி இளமைப்பருவத்தைப் பயன்படச்செய்துகொள்வாயாக.

தகப்பனிறந்தமையால் வருந்தும் பெண்ணுடன் பேசுவோனொருவன் அச்சந்தர்ப்பத்தொடு பொருந்தாத காமச்சுவைபடக் கூறுதல் மாறுபாடானது. இங்கு அவலச்சுவைபடக்கூறுதலே தகும். அங்ஙனம் கூருது மாறுபடக்கூறினமையால் இது விரஸம் எனப்பட்டது.

[தொடரும்]

V. S. ராமஸ்வாமிசாஸ்திரி, B A., B L.,

ஸ்ரீ:

இராமசெயம்.*

(இராமாயணத் திருப்புகழ்.)

36-ஆம் தொகுதியின் ௫௨0-ஆம் பக்கத்தொடர்ச்சி.

நிதிதேடி னுயர்ந்த
மனைகோலி னிருந்து
நிலைகூடி னன்மயங்கி மடவார்மேல்
நினைவாகி னன்மணந்து
பரிவாரம் வாசிதந்தி
நிரைசூழ மேவியந்த உலகாளும்

பதியாகி னுகந்து
முடிசூடி னன்முன்வந்த
படியேயெ லாமிறங்கி அவமேநான்
படுபாடு...........மென்று
கதையாகி யேகுகின்ற
படிமீதில் வாழ்வைநம்பி யழிவேனோ

அதுசாப மேருவஞ்சு
மதுவாளி வேதமந்த்ர
மதுநீப்ர யோகிமுந்தி யெழுபாரும்
அடியோடு சாயுமந்த
முறைபேணி வீரியங்கொ
டதிகாய னவிகொண்டு வருவாயின்

---

* ஏட்டுப்பிரதியிலுள்ளபடி வெளியிடப்படுகிறது.

கிதுகால மாகுமென்று
மதிகூறி வாலிமைந்தன்
இருதோளின் மீதுசெம்பொன் மலைபோலே
இகல்வீட ணுதிவிஞ்சு
கவிராசர் சூழவென்றி
யிளையோனை யேவிநின்ற பெருமாளே. (42)

பாவி ருந்துகு டிக்கையி லேயொரு
மாது வந்துபி டித்துர லோடிரு
பாணி கொண்டுபி ணித்துவை யாவவ ளொருதாய்முன்
பால னெங்கண்ம னைக்குளு ளானினி
நீவி ளங்கென வக்கண மேயவள்
பார கொங்கையு மொக்கலை யானதும் அகலாதே
நீல மஞ்சுபு றப்படு மாறென
வாய்ம டந்தைமுன் மெத்தென வேவரு
நீர்மை கண்டவள் வெட்கிய சோதைமுன் நகுமாறு
நீடு வஞ்சவு ருக்கொளு வாயுனை
யாவர் கண்டு பிடிக்கவ லார்மன
நேச மன்புபி டிப்பத லாதுபின் வசமாமோ
கால சங்கம ருத்துவன் மாலியர்
காலன் வெங்குலி சப்பெய ரோனதி
காயன் முன்புச மர்க்குழ னேவர வரமாயைக்
காய்ச ரங்கள்வி லக்கியி டாவரு
தாரு கன்றலை யைக்கொடு மோதர
தாள தந்தியி னெட்டினெண் ணாயிர நொடிமீதில்
வாலி ழந்துபு ழை ....யருமுது(?)
காலி ழந்துவெ ளுத்திடு கோடுகள்
வாறு திர்ந்துவி ழப்பொரு தேயடர் களமீதே
மாரு தந்தரு வித்தக னாரிடை
யேபு குந்துக ரித்திரண் மேல்விழ
வாகை கொண்டவி லக்குவ னார்தொழு பெருமாளே. ()

கற்றி லாதவன் வஞ்சகன்
முட்டன் மூடன்ம மூங்குணி
கட்டன் மாவிர கன்பழி யுணராதான்
கத்து வோன்மதி கிஞ்சிலு
மற்ற பாபியி வன்கல
கத்த ஞமென நின்றவ ரனைவோரும்

பெற்ற பாவியை நொந்திட
இற்றை நாளள வும்பல்பி
றட்ட ரோடுதி ரிந்தனன் இதுபோதும்
ப்ரக்ஞை யானது தந்தினி
யற்ப மாகிலு நின்பத
பத்தி வாழ்சம யம்புக அருள்வாயே

வெற்றி மாணிட ரந்தக
னுட்க வாலிம கன்பொர
வெற்பை நேர்புய கும்பனை யரிராஜன்
மெத்த மோதிய றைந்திட
மத்த னுருயிர் செங்கனல்
மிக்க சேயிட பன்கொள வொருதூதன்

குற்ற மேவுகி கும்பனை
யுற்று நீடுக ரங்கொடு
குத்தி யாருயிர் கொண்டிட நிருதேசர்
கொட்டம் யாவுமழிந்திட
மட்டி லாதபெ ரும்படை
கொற்ற மாய்வர வின்புறு பெருமாளே. (44)

நற்பங்கய மொப்பது
முற்றும்பணி யிற்றிரு
நட்டம்புரி கிற்பது கெழுநீரை
நக்கன்சடை விட்டது
நத்தும்பர தற்குமுன்
நட்பின்சிரம் வைத்தது மயில்போலக்

கற்பண்டெழு விக்கது
விற்கண்டுமி ழிக்கது
கைக்கொண்டவ ருக்குள விளைசேரக்
கைக்கும்பர லக்கது
சிக்கென்றொரு மைத்துனர்
கட்டும்பத மெப்பொழு தருள்வாயே

வெற்பின்கன கப்புயன்
நற்றம்பிப டத்துயர்
மெத்திந்திர செய்க்கனும் ஒருபாசம்
விட்டெங்கும ழிக்கிட
வுட்கொண்டிர தத்திரள்
மெத்துஞ்சப தத்தொடும் இமையோரை

நிற்பக்கம்வி ளைப்பவ
ரெட்டஞ்சுவெ ளத்தொடு
நெய்க்குங்குகொ லைப்படை யதனோடும்
நிற்கின்றக ளத்தொரு
விற்கொண்டவி லக்குவன்
நித்தம்பர வித்தொழு பெருமாளே. (45)

பாயலென் றகலாத நாகபுங் கவனீடு
மாமுகந் தனில்........வாயுவிஞ் சியபோது
பாடங் கலுமோடியேபுலர்ந் திடவீசும் வலமான
பாணியங் ககலாத நேமியென் பதனூடு
மேதகும் ப்ரபையாகி மேலெழுந் தொளிவீசு
பாவகன் சுடவேவெ ணீறெழுந் திடும்பாவும் அதுபோனற்
றூயபங் கயபாத மீதுநின் றலைமோது
வானெடுந் திரையாறு வேலையம் படியோடு
சூடுமண் டமுமேக மாய்நிறைந் திடுமாய படியாலுன்
சோர்வறும் பெருமாயை யாரறிந் தவர்வேறு
யார்கடந் தவர்தேவ தேவருந் தெளியார்கள்
சோதியின் குணவேலை யாடுவன் களையாற அருள்கூராய்

ஆயிரங் கணைகோடி சூலவெங் கணைகோடி
நாகவெங் கணைகோடி கோரவெங் கணைகோடி
யாடுபங் கயரூப சாயகம் பலகோடி அமரேச
னுடல்வெம் படையான நீள்சரம் பலகோடி
தேவர்தம் படைகோடி பாதகன் கடிதேவ
வாயவெம் படையேவி யாவையுங் கெடநூறி அனுமான்மே
லேயிருந் தமராடி நாணெறிந் திடுபோது
வானகங் குலையாக மாதிரஞ் செவிடாக
யானையுந் தலைசாய வாளிசென் றவன்மார்பு தெரியாவா
றீடழிந் திடமூழ்க ராவணன் சிறுவோனை
யோடவென் றிடுசேட னுடொறும் பிரியாத
ராமசந் திரகோபின் மேவுபுங் கவதேவர் பெருமாளே. (46)

[தொடரும்.]

T. K. இராமாநுஜையங்கார்,
உதவிப்பத்திராசிரியர்.

ஸ்ரீ:

மதிப்புரை.

திவ்வியசூரிசரிதம்:—இது மைசூர் மஹாராஜா ஸர்வகலாசாலைகளில் பிரதம தமிழ்ப்பண்டிதராயிருந்த மஹாவித்வான், கோழியாலம் கோயில் சப்தம் வங்கீபுரம் ஸ்ரீநிவாஸாசாரியரால் இயற்றப்பட்டு, வேதாந்ததீபிகைக் கார்யநிர்வாஹஸபையாரால் பதிப்பிக்கப் பெற்றது.

இதில், முதலில் வைகுந்தச்சிறப்பும், பின் ஆழ்வார்கள் ஆண்டாள் மதுரகவியாழ்வார் இவர்களுடைய வைபவங்களும் ஆசார்யர்களுள் நாதமுனிகள், ஆளவந்தார், எம்பெருமானார், வேதாந்ததேசிகர் இவர்களுடைய வைபவங்களும் வடமொழியிலுள்ள திவ்யஸூரிசரிதை, தமிழ்நடையிலுள்ள குருபரம்பரை முதலியவற்றைப் பின்பற்றி யாரும் எளிதிற் படித்தறிந்து கொள்ளும்படி சாதாரணமான தமிழ்ச்செய்யுளாகப் பாடப்பெற்ற இருபத்தேழு சருக்கங்கள் உள்ளன. இவற்றுள் வேதாந்ததேசிகர் வைபவம் முழுதும் இருப்பதாகத் தெரியவில்லை.

சற்றேறத்தாழ 3000 பாடல்களுள்ள இந்தப்பிரபந்தம் நிலை நிற்கும்படி அச்சிற் பதிப்பித்துதவிய வேதாந்ததீபிகைக் காரிய நிர்வாகஸபையாரது சமயாபிமானம் பாராட்டத்தக்கது.

400 பக்கம் உள்ள இப்புத்தகத்தின் விலை ரூ 3. வேண்டுவோர், 'ஸ்ரீ K. கஸ்தூரிரங்காசாரியர் அவர்கள் M.A., லைப்ரேரியன், பப்ளிக் லைப்ரெரி, பங்களூர்' என்ற விலாசத்துக்கு எழுதிப் பெறலாம்.